# சங்கரன்கோவில் நகராட்சி

**2018–ம் ஆண்டு ஜூன் 29.06.2018ம் தேதி மாலை 4.00 மணிக்கு தனி அதிகாரியால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்**

பொருள் எண் – 336

சங்கரன்கோவில் 2018-2019 ம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற சாலை உட்கட்டமைப்பு நிதியின் கீழ் கீழ்க்கண்ட சாலைகளை மேம்படுத்தவும். அதற்காக தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்க்கும் மன்ற இந்நகர்மன்ற தீர்மான எண்: 322 நாள்.16.05.2018-ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

| வ.எண் | பணிகளின் பெயர் | தார் சாலையின் நீளம் மீட்டரில் | பேவர் பிளாக் சாலையின் நீளம் மீட்டரில் | முதிப்பீட்டுத் தொகை (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | கழுகுமலை இணைப்பு சாலை (கக்கன் நகர்) புதுமனை தெரு, வடக்குரத வீதி, பாட்டத்துர் மெயின்ரோடு. திருவுடையாபுரம், கோமதி நகர் ஆகிய சாலைகளுக்கு தார்சாலை அமைத்தல் | 2800 | - | 173.00 |
| 2 | திருநீலகண்டர் ஊரணி தடுப்பு சுவர் மற்றும் பேவர்பிளாக் சாலை மற்றும் பாரதியார் 5,6,7,8, மற்றும் திருவுடையான் தெரு சாலைகளுக்கு தார்சாலை அமைத்தல் | 2093 | 500 | 191.00 |
| 3 | ரயில்வே பீடர் ரோடு (கணபதிநகர்இ ஏ.வி.ஆர்.எம். காலணி) கோமதி நகர் II, மற்றும் காவேரி நகரில் தார் சாலை மற்றும் கால்வாய் அமைத்தல். | 2475 | - | 158.00 |
| 4 | கோமதியாபுரம் 1 முதல் 4 தெருக்களுக்கும் ராமசாமியாபுரம் 4,5-வது தெருக்களுக்கும் சங்கர் நகர் ஆகிய தெருக்களுக்கு தார் சாலையும்இ பி.எஸ். நகர் வடகாசியம்மன் கோவில் தெரு ஆகிய தெருக்களுக்கு பேவர் பிளாக் சாலை அமைத்தல். | 3360 | 435 | 178.00 |
| | | 10728 | 935 | 700.00 |

மேற்கண்ட பழுதடைந்த சாலைகளை ரூ 700.00/- மதிப்பீட்டில் 2018-2019-ம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற சாலை உட்கட்டமைப்பு நிதி அல்லது வேறு ஏதேனும் திட்டத்தின் கீழ் அரசின் முழு மான்யம் கேட்டு அரசுக்கு திட்ட கருத்துரு அனுப்பப்பட்டதில் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடித ந.க.எண்.12981/2018/இ3, நாள்.27.06.2018-ன் படி மேற்கண்ட திட்டத்திற்கான பணிகள் மேற்கொள்வதற்கு கீழ் கண்ட தலைப்பின் கீழ் நிதி ஒதிக்கீடு செய்து நகர்மன்ற தீர்மானம் வழங்க தெரிவிக்கப்பட்டுள்ளது.

| மதிப்பீட்டு தொகை | தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு திட்ட மானிய நிதி | மாநில நிதிக்குழு மானிய நிதி | மாநில நிதிக்குழு மானிய ஊக்கநிதி | நகராட்சி பங்களிப்பு |
|---|---|---|---|---|
| 7.00 | 2.66 | 2.10 | 1.54 | 0.70 |

மேற்காணும் நிதி ஒதிக்கீடு அடிப்படையில் தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் 2018-2019-ம் ஆண்டுக்கு வரிசை எண். 1 முதல் 4 வரை உள்ள பணிகளை மேற்கொள்வதற்கு மன்றம் அனுமதிக்கலாமபொருள் எண் – 337

தீர்மானம் :அனுமதிக்கப்பட்டது

பொருள் எண் – 337

சங்கரன்கோவில் நகராட்சியில் **2017–2018**ம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரயில்வேபீடர் ரோட்டில் சாலையை அகலப்படுத்தும் பணிகள் நடைபெற இருப்பதால் சாலையின் இரு ஓரங்களிலும் ஒரு மீட்டர் நீளத்திற்கு அகலப்படுத்த வேண்டியுள்ளதால் சாலையின் ஓரங்களில் உள்ள **18** மின்கம்பங்களை மாற்றி மின்வாரியத்திற்கு **18.01.2018**ல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. மேற்படி மின்கம்பங்களை மாற்றி அமைப்பதற்கு மின்வாரியத்திடமிருந்து மின்வாரிய கடித ந.க.எண். EE/D/SNKL/TA1/F.DCW/San./16 நாள்.**18.5.2018**ன்படி **5**–மின் கம்பங்களை மாற்றி அமைப்பதற்கு தொகை ரூ.**265760/–**ம் மற்றும் LR No.AE/JE/O&M/F.App.Tracking/D.No.192/20 நாள்.**21.6.2018**ன்படி **6** மின் கம்பங்களை மாற்றி அமைப்பதற்கும் தொகை ரூ.**149450/–** ஐ செலுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி மொத்த தொகை ரூ.**4,15,210/–** செலுத்த மன்றம்அனுமதிக்கலாம். மேற்படி மின்வாரிய கடிதத்தினை பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது. (நக.எண். (1888/2017/Ï1)

தீர்மானம் :அனுமதிக்கப்பட்டது

பொருள் எண் – 338

இந்நகராட்சி பொதுசுகாதார பிரிவில் இயங்கி வரும் டம்பர் பிளேசர் வாகனம் TN 76W 0408 வாகனத்தின் தகுதிச்சான்று **25.07.2018**ல் முடிவடைவதாகவும், மீண்டும் தகுதிச்சான்று பெற பழுதுவேலைகள் செய்வதற்கும் அதற்காகும் செலவினம் ரூ.**46000/–**க்கும் மேற்கொள்வதற்கும் அனுமதி வேண்டி ஓட்டுனர் தனது **18.6.2018**ந் தேதிய விண்ணபத்தின்படி கோரியுள்ளார். எனவே மேற்கண்ட விண்ணபத்தின்படி டிம்பர் பிளேசர் வாகனம் பழுது பார்க்கவும்அதற்கான செலவினத்துடன் கூடுதலாக தற்போது புதிதாக **1.7.2017** முதல் விதிக்கபடவுள்ள GST வரி செலவினமும் சேர்த்து செலவினம் மேற்கொள்ளவும் பொதுசுகாதார அவசர அவசியம் கருதி உச்சவரம்பினைவிட கூடுலாகும் செலவினத்தினை நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின் பின்னேற்பு பெறவும் அனுமதிக்காக வைக்கப்படுகிறது. (கோப்பு எண். **1418/2018/எச்1)**

தீர்மானம் :அனுமதிக்கப்பட்டது

பொருள் எண் – 339

சங்கரன்கோவில் அருள்மிகு சங்கரநாராயணசுவாமி திருக்கோவில் 17.07.2018 முதல் 28.7.2018 முடிய நடைபெற உள்ள ஆடித்தபசு திருவிழா மற்றும் 10.8.2018 அன்று நடைபெற உள்ள ஆடிமாதாந்திர வெள்ளி திருவிழாவை முன்னிட்டு கீழ்க்கண்ட குத்தகை இனங்களுக்கு பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி வரவேற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | குத்தகை இனம் | குத்தகை காலம் | வைப்புத் தொகை |
|---|---|---|---|
| 1. | ஆடித்தபசு திருவிழாவை முன்னிட்டு சுவாமி சன்னதி தெரு தவிர நகராட்சி எல்கைக்குள் ஏனைய தெருக்களிலும் சாலை ஓரங்களில் மற்றும் பொதுஇடங்களில் (கீழமாடவீதி மற்றும் திருக்கோவிலுக்கு வரும் வாகன நிறுத்துமிடம் நீங்கலாக) வியாபாரம் செய்பவர்களிடம் சுங்கம் வசூலிக்கும் உரிமம் | 17.7.2018 முதல் 28.7.2018 வரை | ரூ.1,00,000/– |
| 2. | ஆடி மாதாந்திர வெள்ளி திருவிழாவை முன்னிட்டு சன்னதி தெரு மற்றும் நகராட்சி எல்லைக்குள் தெருக்களிலும், சாலை ஓரங்களிலும் மற்றும் பொது இடங்களிலும் தற்காலிக கடை அமைத்து வியாபாரம் செய்பவர்களிடம் சுங்கம் வசூல் செய்யும் உரிமம் | 09.08.2018 முதல் 11.08.2018 வரை | ரூ.25,000/– |

ந.க.எண்.1511/2018/பி2

தீர்மானம் :அனுமதிக்கப்பட்டது

பொருள் எண் – 340

சங்கரன்கோவில் நகராட்சிக்கு கோட்டமையாலைறு, தாமிரபரணி மற்றும் மானூார் ஆகிய மூன்று கூட்டுக்குடிநீர் திட்டங்கள் மூலம் பாதுகாக்கப்பட்ட குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டு வருகிறது. மேற்படி குடிநீருக்கு மார்ச் மாதம் 2018 வரை ஒரு கிலோ லிட்டருக்கு ரூ.4.50 வீதம் குடிநீர் கட்டணம் செலுத்தப்பட்டு வந்தது. தற்போது ஏப்ரல் மாதம் முதல் குடிநீர் வடிகால் வாரியத்திடமிருந்து 17.5.2018ல் பெறப்பட்ட கேட்பு ஒரு கிலோ லிட்டருக்கு ரூ.9.45 வீதம் உயர்த்தப்பட்டு செலுத்துவதற்கு அனுமதி வேண்டப்படுகிறது.

1. ஏற்கனவே இருந்த குடிநீர் கேட்பு ஒரு கிலோ லிட்டருக்கு ரூ.4.50/–
2. தற்போது உயர்த்தப்பட்ட குடிநீர் கேட்பு ஒரு கிலோ லிட்டருக்கு ரூ.9.45/–

தீர்மானம் :அனுமதிக்கப்பட்டது

பொருள் எண் – 341

சங்கரன்கோவில் நகராட்சி ஆணையாளர் அவர்களின் ஜுன் 2018 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்வைக்கப்படுகிறது.

தீர்மானம் :அனுமதிக்கப்பட்டது

நாள் – 29.06.2018

தனிஅலுவலர் (ம) ஆணையாளர்,
சங்கரன்கோவில் நகராட்சி.